# பத்திரிக்கை செய்தி

## ஜி.எஸ்.டி பதிவு சான்றிதழ் வழங்க ரூ.2,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வணிகவரி அலுவலர் கைது

புகார்தாரர் திரு.சேசு, புத்தாநத்தம், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டத்தை சேர்ந்தவர். புகார்தாரர் மணப்பாறையில் நகைக்கடை வைத்து நகைதொழில் செய்து வருகிறார். புகார்தாரர் தனது கடைக்கு ஜி.எஸ்.டி பதிவு சான்றிதழ் வாங்குவதற்காக 25.06.2023 அன்று ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்திருந்தார். புகார்தாரரின் விண்ணப்பத்தின்படி நேற்று 04.07.2023 வணிகவரித்துறை அலுவலர் கடையை ஆய்வு செய்து அலுவலகத்திற்கு நேரில் வருமாறு கூறியுள்ளார். புகார்தாரர் வணிகவரித்துறை அலுவலகத்திற்கு சென்று திரு.கோவிந்தசாமி, வணிகவரித்துறை அலுவலர், மணப்பாறை வட்டம், திருச்சி மாவட்டம் அவர்களை சந்தித்தபோது விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து சான்றிதழ் வழங்குவதற்காக திரு.கோவிந்தசாமி, வணிகவரித்துறை அலுவலர், அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.2,000/- கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் திரு.சேசு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை திருச்சி பிரிவில் புகார் மனு ஒன்று அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 05.07.2023 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு.கோவிந்தசாமி, வணிகவரித்துறை அலுவலர் அவர்களிடம் லஞ்ச பணமான ரூ.2,000/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

## COMMERCIAL TAX OFFICER WAS ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.2,000/- FOR ISSUING GST CERTIFICATE

The complainant Tr.Sesu, residing at Puthanatham, Manapparai circle, Trichy District. Complainant is doing jewelry business and running jewellery shop at Manapparai. Complainant had applied for GST Certificate for his shop through online on 25.06.2023. Yesterday 04.07.2023, commercial tax officer inspected his shop and instructed to meet him at Commercial Tax office. The complainant went to commercial tax office and met Tr.Govindasamy, Commercial Tax Officer, Manapparai Circle, Trichy district, who demanded Rs.2,000/- as bribe for issuing GST certificate. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Trichy detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (05.07.2023). When the complainant met Tr.Govindasamy, Commercial Tax Officer reiterated and received the bribe amount of Rs.2,000/- from the complainant. The accused was arrested.